# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## *2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம்*

---

*(2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2014, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்*

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 10.00**

**2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம்**

[2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 24 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. (கூட்டி) 18/2012

**சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலயவைக் கூட்டிணைப் பதற்கானதொரு சட்டம்**

"சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய" என அழைக்கப் படுவதும் அறியப்படுவதுமான சபையொன்று அதன் உறுப்பினர் களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க அதன் குறிக்கோள்களைப் பயனுற நிறைவேற்றும் நோக்கத்துக்காக மற்றும் சொல்லப்பட்ட சபையுடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங் களையும் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்கென இதற்குமுன்னர் இலங்கையில் உருவாக்கப்பட்டுள்ளதாதலாலும் : — முன்னுரை.

அத்துடன், சொல்லப்பட்ட சபையானது எந்தப் பல்வேறு குறிக்கோள்களுக்காகவும் கருமங்களுக்காகவும் அமைத்துருவாக் கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை இது வெற்றிகரமாக நிறைவேற்றியும், கொண்டுநடாத்தி யும் வந்துள்ளதாதலாலும், அத்துடன் அது கூட்டிணைக்கப்பட விண்ணப்பித்துள்ளதாதலாலும், சொல்லப்பட்ட விண்ணப் பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்கானதாக விருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

**1.** இச்சட்டம், 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். — சுருக்கப் பெயர்.

**2.** (1) இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய"வின் தற்போதைய உறுப் பினர்களாக உள்ளவர்களும் அத்துடன் இத்தால் அமைத்துரு வாக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் "கூட்டுத்தாபனம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) "சமஸ்த லங்கா சாசனாரக்சக — சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலயவைக் கூட்டிணைத்தல்.

மண்டலய" என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறா வழியுரிமை கொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன், அதற்கெதிராக வழக்குத்தொடுக்கவும் படலாம். பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும், பயன்படுத்தவும், அது விரும்பியாங்கு அதனை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் உடையதாயிருத்தலும் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவுசெய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்துக்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது :-

(அ) புத்தசாசனத்தின் நலனை மேம்படுத்துவதற்கு நடவடிக் கைகள் எடுப்பதற்கு இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(ஆ) பிக்கு சமூகத்தின் அபிவிருத்தியை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதற்கு இயைபான அதிகாரங் களுக்கு உதவுதல் ;

(இ) பின்தங்கிய பிரதேசங்களில் அமைந்துள்ள பௌத்த ஆலயங்களின் அபிவிருத்தியையும் புனரமைப்பையும் ஊக்குவித்தலில் இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(ஈ) பௌத்த குருமார்களுக்கும் பௌத்த பொது நிலை யினருக்கும் இடையில் சுமுகமான உறவை உறுதிப் படுத்துவதில் இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(உ) "தம்ம பாடசாலைக் கல்வி" யினை அபிவிருத்தி செய் வதற்கு இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(ஊ) தம்ம பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் மாண வர்களின் நலன்புரிக்காக செயற்படுவதற்கு இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(எ) வெளிச்செல்வாக்குகளிலிருந்து பௌத்த மரபுரிமை களை விருத்திசெய்வதற்கும் பாதுகாப்பதற்கும் இயை பான அதிகாரங்களுக்கு உதவுதல் ;

(ஏ) பௌத்த மதப் பற்றாளர்களிடையே பௌத்த மத மரபுகளைப் பரப்புதலும் அவற்றைப் பாதுகாப்பதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்ற இயைபான அதிகாரங்களுக்கு உதவுதல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு கூட்டுத்தாபனத்தின் மாவட்ட மற்றும் மாகாணக் கிளை களுடன் ஒருங்கிணைதலும் மேற்பார்வை செய்தலும் அவற்றிற்கு வழிகாட்டுநெறிகளை வழங்குதலும்.

அரசாங்கத்தின் அல்லது மாகாணத்தின் அமைச்சினது அல்லது திணைக்களத்தினது பணியுடன் முரண்பாடில்லாதிருப்பதனைக் கூட்டுத்தாபனம் உறுதிப்படுத்துதல்.

**4**. கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்கள், கூட்டுத்தாபனத்தின் பணிக்கும், அத்துடன் அரசாங்கத்தின் அல்லது ஏதேனும் மாகாண சபையின் ஏதேனும் அமைச்சினால் அல்லது திணைக் களத்தினால் ஒரேநேரத்தில் நிறைவேற்றப்படும் ஏதேனும் பணிக்கும் இடையே முரண்பாட்டை உருவாக்காதிருக்கும் அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் என்பன இச்சட்டத்தின் வேறு ஏற்பாடுகளுக்கும் இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான பதவிதாங்குநர்களின் அத்த கைய எண்ணிக்கையோரைக் (இதனகத்துப்பின்னர் "குழு" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) கொண்ட நிறைவேற்றுக்குழுவொன் றினால், நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) சங்கத்தின் குழுவொன்று இச்சட்டம் தொடங்குகின்ற தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகித்தல் வேண்டுமென் பதுடன் 7 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதிகளில் வழங்கப்பட்ட வாறான முறையில் முதலாவது சபையானது நியமிக்கப்படும் வரை அல்லது தெரிவுசெய்யப்படும் வரை கூட்டுத்தாபனத்தின் குழுவாகத் தொழிற்படுதல் வேண்டும்.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் முதலாவது குழுவானது இச்சட்டம் தொடங்குகின்ற தேதியிலிருந்து ஒரு ஆண்டுக்குள் நியமிக்கப் படுதல் வேண்டும் அல்லது தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.

(3) (அ) காப்பாளர்கள் மற்றும் மதியுரையாளர்கள் உட்பட குழுவின் பதவிதாங்குநர் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டு காலப்பகுதியொன்றுக்கு நியமிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய எவரேனும் பதவிதாங்குநர், காப்பாளர் அல்லது மதியுரைஞர் சொல்லப்பட்ட மூன்று ஆண்டு காலப்பகுதியின் முடிவின் பின்னர் மீள்நியமனத்துக்கு அல்லது மீளத் தெரிவு செய்யப்படுவதற்கு தகைமையுடையதாதல் வேண்டும்.

(ஆ) பதவிதாங்குநரின் இறப்பு, பதவிதுறத்தல், இயலாமை அல்லது பதவியிலிருந்து அகற்றுதல் காரணமாகப் பதவி வெற்றிடமொன்று ஏற்படும்பட்சத்தில், குழுவானது கூட்டுத்தாப னத்தின் விதிகளுக்கிணங்க, அத்தகைய வெற்றிடத்தை நிரப்பு வதற்கு ஆளொருவரைத் தெரிவுசெய்தல் அல்லது நியமித்தல் வேண்டும்.

(இ) (ஆ) என்னும் பந்தியின்கீழ் தெரிவுசெய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஆள் எந்த உறுப்பினரை பின்னுறுகின்றாரோ அந்த உறுப்பினரின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்காக மட்டும் பதவிவகித்தல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**6**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தின தும் ஏற்பாடுகளுக்கமைவாக கூட்டுத்தாபனமானது பின்வருவன உட்பட கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற் றுள் ஏதேனுமொன்றை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசிய மானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான அத்தகைய எல்லாச் செயல்களையும் கருமங்களையும் மற்றும் விடயங் களையும் செய்வதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்குமான தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கெடுத்தல் அல்லது கொடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையில் பராதீனப்படுதத்துதல், பாராபந்தத்துக்குட்படுத்துதல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்கு அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அவசிய மானவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் கூட்டுத்தாபனத்தில் அதன் சார்பில் அதிகாரமளிக் கப்பட்ட எவரேனும் அலுவலர் அல்லது முகவர் ஊடாகவாயினுஞ்சரி அல்லது நேரடியாகவாயினுஞ்சரி ஈடுபடுதல் மற்றும் புரிதல் அல்லது நிறைவேற்றல் ;

(இ) காசாக அல்லது பொருளாக மானியங்களை கொடை களை நன்கொடைகளை மற்றும் அன்பளிப்புகளை ஏற்றுக்கொள்ளுதல் :

ஆயின், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் எது எவ்வாறிருப் பினும் அதற்கு முரணாகாதவகையில், சபையானது, எல்லா வெளிநாட்டு மானியங்கள், கொடைகள் அல்லது நன்கொடைகள் தொடர்பிலும் நிதி என்னும் விடயம் குறித்தொதுக்கப்பெற்ற அமைச்சரின் அமைச் சினது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் எழுத்திலான முன்னங்கீகாரத்தைப் பெறுதல் வேண்டும் ;

(ஈ) அதன் நிதிகளை முதலீடு செய்தலும், ஏதேனும் வங்கி யில் நடைமுறை, வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளை திறத்தல், பேணுதல் மற்றும் மூடிவிடுதல் ;

(உ) நிறைவேற்றுக்குழு பொருத்தமானதெனக் கருதக்கூடிய வாறான அத்தகைய முறையிலும் அத்தகைய பிணைப் பொறுப்பின் மீதும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங் களுக்காக நிறைவேற்றுக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியிலிருந்து அல்லது நிறுவனத்திட மிருந்து ஏதேனும் பணத்தைக் கடனாகப் பெறுதல் அல்லது திரட்டுதல் ; அத்துடன்

(ஊ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்று வதற்கு தேவைப்பட்டவாறான அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த் தல், இடமாற்றம் செய்தல், ஊதியமளித்தல், அவர் கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல் மற்றும் அவர்களைப் பதவிநீக்குதல்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**7.** (1) காலத்துக்குக்காலம் கூட்டுத்தாபனம் ஏதேனும் பொதுக் கூட்டத்திலும், சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றில் இரண்டுக்கும் குறையாதோரின் வாக்குப் பெரும் பான்மைகொண்டும், பின்வரும் விடயங்கள் எல்லாவற்றுக் காகவும் அல்லது அவற்றுள் ஏதேனும் ஒன்றுக்காக இச்சட்டத் தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடு களுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாப னத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பாண்மையை வகுப்பாக்கம் செய்தல், உறுப்பினர் களைச் சேர்த்தல், அவர்கள் விலகுதல், அவர்களை விலக்குதல் அல்லது பதவியிலிருந்து நீக்குதல் ;

(ஆ) குழுவின் பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல் அல்லது பதவியை வறிதாக்குதல் அத்துடன் பதவி யிலிருந்து அகற்றப்படுதல் அத்துடன் அவர்களின் தத்துவங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ;

(இ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்களின், முகவர்களின் மற்றும் சேவையாளர்களின் தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் ;

(ஈ) குழுவின் கூட்டங்களில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறைகள், கூட்டங்களைக் கூட்டுதலும் நடாத்துதலும், அத்தகைய கூட்டங்களின் அறிவித்தல் கள் மற்றும் நிகழ்ச்சிநிரல், அதற்கான கூட்ட நடப்பெண் அத்துடன் அதில் அலுவல்களை நிறைவேற்றுதல் ;

(உ) கூட்டுத்தாபனத்தினதும் குழுவினதும் உறுப்பினராக விருப்பதற்கான தகைமைகளும் தகைமையீனங்களும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும் முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) கூட்டுத்தாபனத்தின் அலுவல்களின் பொது முகாமைத் துவம் மற்றும் அதன் நோக்கங்களை எய்துதல் மற்றும் கூட்டுத்தாபனத்தைக் கலைத்தல்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட விதியொன்றென்றாற்போன்று அதே போன்ற கூட்டமொன்றில் அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம், அதற்கெதுவும் சேர்க்கப்படலாம் அல்லது அது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் அனைவரும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

(4) இப்பிரிவின்கீழ் ஆக்கப்படும் விதிகள் அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

8. குழுவானது உறுப்பினர்களின் பெயர், முகவரி மற்றும் வேறு அவசியமான விபரங்களை எழுதிப்பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதிவேடொன்றைப் பேணுதல் வேண்டும். உறுப்பினர்களின் பதிவேடு

**9**. (1) கூட்டுத்தாபனம், அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் நிதியம்.

(2) கூட்டுத்தாபனத்தின் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப்பணங்கள், உதவுதொகைகள், கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் என்ற வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எல்லாப் பணங்களும் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும் மற்றும் பணிகளையும் பிரயோகிப்பதிலும் புரிவதிலும் மற்றும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை ஈடுசெய்வதற்கான எல்லாப் பணங்களும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனமானது, கூட்டுத்தாபனத்தின் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அத்துடன் அதன் வேறெல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது கணக்காய்வாளர் தலைமையதிபதியால் நியமிக்கப்பட்ட தகைமைபெற்ற கணக்காய்வாளர் ஒருவரினால் ஆண்டுதோறும் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

(4) இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது -

(i) இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான தனி ஆள் ஒருவர் ; அல்லது

(ii) கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருந்து, கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையதான கணக்காளர்கள் குழுமம் ஒன்று,

எனப் பொருள்படும்.

ஆண்டறிக்கை.

**11.** (1) குழுவானது ஒவ்வொரு நிதியாண்டிற்கும் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளின் அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டுமென்பதுடன், புத்தசாசனம் மற்றும் சமய அலுவல்கள் என்னும் விடயத்திற்கு குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கும் 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புகள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் பதிவாளருக்கும் அத்தகைய அறிக்கையுடன் தொடர்புடைய ஆண்டின் அடுத்துறுகின்ற ஆண்டின் ஆறுமாதங்கள் முடிவடைவதற்கு முன்னர் கணக்குகளின் கணக்காய்வு அறிக்கையுடன் சேர்த்து அத்தகைய அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) நிதியாண்டின்போது கூட்டுத்தாபனத்தால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு மற்றும் உள்ளூர் பணங்களுடன் தொடர்புடைய வேறானதொரு கணக்கொன்றை (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறிக்கையுடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

சபையால் செலுத்தப்பட வேண்டியவையும் செலுத்தப்படற்பாலனவுமான தனிசுகள்.

**12.** இச்சட்டம் தொடங்குகின்ற திகதிக்கு நேர்முந்திய நாளன்று சபையின் எல்லாத் தனிசுகளும், பொறுப்புகளும் இத்தால் அமைத்துருவாக்கப்படும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அந்நாளன்று சபைக்கு வருமதியாகவுள்ள எல்லாத் தனிசுகளும், செலுத்தப்படுதற்குரிய ஒப்பப்பணங்களும், உதவுதொகைகளும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம் அசைவுள்ள அசைவற்ற ஆதனத்தை வைத்திருக்கலாம்.

**13.** கூட்டுத்தாபனமானது ஏதேனும் கொள்வனவு, மானியக் கொடை, கொடை, இறுதிவிருப்பாவணக் கையளிப்பு ஆகியவற்றின் பயனைக்கொண்டு அல்லது வேறுவகையாக அதற்குரித்தாக்கப்படக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளவும், வைத்திருக்கவும் சட்டப்படி ஆற்றலும் தகுதியும் உடையதாதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஆதனமெல்லாம், இச்சட்டத்தின் நோக்கத்துக்காகவும், 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அதனை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையுதிர்க்க முழுத்தத்துவத்துடன் கூட்டுத்தாபனத்தால் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*பணங்களினதும் ஆதனத்தினதும் பிரயோகம்.*

**14.** கூட்டுத்தாபனத்தின் பணங்களும் ஆதனமும் அவை எவ்வாறு பெறப்பட்டவையாக இருப்பினுஞ்சரி, இதன்கண் தரப் பட்டுள்ளவாறு அதன் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கான மாத்திரமே பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவற் றின் பாகம் எதுவும் பங்கிலாபம், மிகையூதியம் அல்லது இலாபம் அல்லது எல்லா வேறு வகையிலாயினுஞ்சரி நேரடியாக அல்லது நேரடியாகவல்லாமல் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படுதலோ அல்லது கைமாற்றப்படுதலோ ஆகாது.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**15.** (1) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, குழுவின் இரண்டு உறுப்பினர்கள் முன்னிலையிலன்றி சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது என்பதுடன் அவர்கள் தாம் சமுக மாயிருந்தமைக்கு அடையாளமாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய கையொப்பமிடுதலானது, எவரேனும் ஆள் சாட்சி யாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது அத்தகைய குழுவால் தீர்மானிக்கப்பட்டவாறான குழுவின் பதவிதாங்குநரின் கட்டுக்காப்பிலிருத்தல் வேண்டும்.

*கலைப்பின்மீது எஞ்சியிருக்கும் ஆதனம்.*

**16.** (1) கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மீது அதன் எல்லாத் தனிசுகளும், பொறுப்புக்களும் செலுத்தித் தீர்க்கப்பட்ட தன் பின்னர் எத்தகையதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சி யிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப் பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படுதலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த, குறிக்கோள் களைக்கொண்டதும் அல்லது கொண்டனவையுமான வேறு ஏதேனும் நிறுவனத்துக்கு ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தை அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிப்பதிலிருந்து தடைசெய்யப்பட்டதும் அல்லது தடைசெய்யப்பட்டவையுமான வேறேதேனும் நிறுவனத்திற்கு அல்லது வேறெவையேனும் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக தோதான நிறுவனமான சமூகமாயுள்ள உறுப்பினர்கன் பெரும்பான்மை வாக்குகள் மூலம் பொதுக் கூட்டமொன்றில் கலைப்பதற்கு உடன் முன்னர் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களினால் தீர்மானிக் கப்படுதல் வேண்டும்.

**17.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும், குடியரசினது உரிமைகளையேனும் அல்லது ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் பங்கப் படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

*குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*